Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939,

உ

# இந்துசாதனம்

விரோதி வருடம் (1889) ஆவணி மாதம் 28 ௨ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-௬௩] யாழ்ப்பாணம்:- கர௵ ஆவணிமீ ௨௨ ௨ வெள்ளிக்கிழமை (7 செப்டெம்பர் 1951) [இல. - ௬௨]

உ

## தோத்திரம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்ப தன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண் டாய்முழக் குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்

—அப்பர் சுவாமிகள்

[திருச்சத்திமுற்றத்து உறையும் சிவக்கொழுந்தே! யமன் கொண்டு போவதன்முன் நின் திருவடிச் சுவட்டினை என் தலையிற் பொறித்துவை. இல்லையாயின அடியானைக் காவாதவிட்ட பழி உன்னை வந்து மூடும். மூவா முழுப்பழி - அழியாதபழி] தழல் - நெருப்பு

## திருச்சத்திமுற்றத் தலச்சிறப்பு

திருச்சத்திமுற்றம், சோழநாட்டில் காவிரியின் தென் கரையிலுள்ள 22-வது தலம். இறைவனைச் சத்தி பூசித்துத் தழுவி முத்தமிட்ட காரணத்தால் சத்திமுத்தம் எனப்பெயர் பெற்றது என்பது வரலாறு. இப்போது சத்திமுற்றம் என வழங்குகின்றது. இறைவனைச் சத்தி பூசித்த வரலாறு "சென்று சேர்ந்து திருச்சத்தி முற்றத்திருந்த சிவக்கொழுந்தை, குன்றமகடன் மனக்காதல் குலவும் பூசைகொண்டருளும், என்றும் இனிய பெருமானை" எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தும், "திருச்சத்தி முற்றத்திற் சென்றெய்தித் திருமலையாள் அருச்சித்த சேவடிகள் ஆர்வமுறப்பணிந்தேத்தி" எனத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணத்தும் வரும் சேக்கிழார் பெருமான் வாக்காலும், "மட்டார் குழலி மலைமகள் பூசை மகிழ்ந்தருளும் சிட்டா" எனத் தலப்பதிகத்து வரும் ஆட்சியாலும் அறியக்கிடக்கின்றது. மேலும், இறைவி இறைவரைப் பூசித்து அவரது சொரூபத்தினைத் தரிசிக்க விரும்பியதாகவும், சிவலிங்கத் திருமேனியின்றும் சோதி தோன்றியதாகவும், இறைவி அவ்வளவில் இறைவரைக் கட்டித் தழுவிக் கொண்டதாகவும் கூறுகின்றார்கள். சிவலிங்கத் திருமேனியிலும் அடையாளம் காணப்படுகின்றது. மூலத்தானத்திற்குப் பக்கத்தில் இறைவி சிவலிங்கப் பெருமானைக் கட்டித் தழுவி முத்தமிட்ட திருக்கோலமும் தரிசிக்க உளளது.

திருநாவுக்கரசு நாயனார் தில்லையிலே தங்கித் திருப்பணி செய்து வரும் நாளில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரது பெருமைகளை அடியார்கள் சொல்லக்கேட்டு அதிசயமாம் காதல்மிக, சீகாழியை அடைந்து ஞானசம்பந்தப் பெருமானை வணங்கி அவருடன் ஆலயத்திற்குச் சென்று பதிகம்பாடிய பின் பொன்னி நதியின் இருகரையிலும் உள்ள தலங்களைத் தரிசிக்க விரும்பி விடைபெற்றுப் பல தலங்களையும் பணிந்து பதிகம் பாடித் திருச்சத்தி முற்றத்தினை அடைந்தனர். முன் திருப்பெண்ணாகடத்தில், தனக்குச் சமணத் தொடக்குண்ட உடல் தூய்மை பெறும் பொருட்டுச் சூலக்குறியும் இடபக் குறியும் பொறிக்குமபடி கேட்டுத் தோளில் பொறிக்கப் பெற்றது போலவே, இங்குத் திருவடிகளைச் சிரசிற் சூட்டவேண்டி 'கோவாய் முடுகி' என்னும் இத் திருப்பதிகத்தைப் பாடியருளினர். வேண்டுவார் வேண்டுவதே ஈவானாகிய இறைவன் "நல்லூரில் வா வா" என, அவ்வாறே சென்று திருவடி சூட்டப் பெற்றனர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருப்பட்டீச்சரநாதர் அருளால் முத்துப்பந்தல் பெறுதற்குமுன் இத்தலத்தை வணங்கிப் பதிகம்பாடி அருளினர் என்பது புராணவரலாறு. பதிகம் சிதல் அரித்து விட்டது போலும். திருச்சத்திமுற்றத்திற்குத் தெற்கு வீதியாயுள்ளது திருப்பட்டீச்சரத்திற்கு வடக்கு வீதியாகும். இரண்டும் அவ்வளவு அணிமையில் உள்ளன. ஆலயம் இரண்டு பிராகாரங்களையுடையது. கோபுரம் உண்டு. கோபுரத்திற்கு இடது பக்கத்தில் வெளியில் சிவமாயுள்ள மண்டபங் காணப்படுகின்றது. வலது பக்கத்தில் வல்லபை கணபதி காட்சியளிக்கிறார். சுவாமி பெயர் பதிகத்தில் பாசுரந்தோறும் இறுதியிற் போற்றப் பெற்றிருக்கிறது. அம்மைக்குத் தனியே வடக்குப் பிராகாரத்தில ஆலயம உண்டு. சுவாமி: சிவக்கொழுந்து நாதர். அம்மை: பெரியநாயகி. தீர்த்தம: சூரியபுஷ்கரணி.

இருப்பிடம: தாராசுரம இருப்புப்பாதை நிலயத்தினின்று தென் மேற்கே இரண்டு நாழிகை அளவில் அடையத்தக்கது.

—தருமபுர ஆதீனவெளியீடு. 281.

## ஒட்டுத்தோடங்கன்று

'எத்தனுவத்தை' என்னும் கிராமத்தில் 25 ஆண்டுகளுக்குமுன் நாட்டிய ஒரு தோடைமரத்திலிருந்து மூகை எடுத்து நாரத்தைக் கன்றில ஒட்டப்பெற்ற ஒரு தோடங்கன்று 4 வருடங்கட்கிடையில் காய்க்க ஆரம்பித்ததென்றும், தாய்மரத்திலும் பார்க்க இந்த ஒட்டுத் தோடை அதிக பழங்களைக் காய்த்ததென்றும், ருசிகரமானதென்றும், பழங்களுள் விதைகள் ஒன்று இரண்டுதான் இருந்தன என்றும் விவசாயப்பகுதியார் சொல்லுகிறார்கள்.

# சிவஞானபோதச் சொற்பொழிவு

— திரு. V. P. காந்திமதிநாதபிள்ளை அவர்கள் —

III

இவ்வுலகில் ஒருசாதிப் பொருள்களான நெல், ஈசல் முதலியன கால விசேடத்தால் ஒருங்கே தோன்றி நின்றழிவதை யறிவோம். ஈண்டுப் பொருள்கள் ஒருங்கே தோன்றற்கும், நிற்றற்கும் அழிதற்கும், காரணங்கள் அவற்றின் சாதிப்பொதுத் தன்மையும் கால விசேடமுமே. இவ்வுலகப் பொருள்கள் யாவும் பலவாய்ச் சடமாய் அவயவப் பகுப்புடையனவாய்ச் சுட்டி யறியப்படுவனவாயிருத்தலால் ஒருசாதிப் பொதுத்தன்மை யுளளது. கால விசேடமும் வரும்போது இவைகள் ஒருங்கே யழியவும், மீளவும் ஒருங்கே தோன்றவும் கூடும். எனவே இவ்வுலகம் ஒருசேரத்தோற்ற ஒடுக்கங்களாகிய தொழில்களைப் பொருந்துமென முடியும். இத்தோற்ற ஒடுக்கங்கள் உள எனவே இடைநிலையாகிய நிதி அல்லது நிலைத் தொழிலும் உண்டெனபதாகி இவ்வுலகம் ஒருசேர முத்தொழிற்படுமென முடியும. இக் கருத்தினையுணர்த்தவே 'அவன், அவள், அது' என்றபோதே பலவாய்ச் சடமாதலும் அவயவப் பகுப்புடைமையும சுட்டியறியப்படுந் தன்மையும் பெறப்படுமாயினும் இச்சூத்திரம் உலகினை அச்சொற்களால் மாத்திரம் விளக்கி நிறுத்தாது, உலகப் பொருள்களுக் குள்ள சாதிப் பொதுத்தனமையு முணர்த்த ஒரே சொல்லாகிய 'அவை' எனனும் சொல்லையும் சேர்த்து 'அவன், அவள், அது எனும் அவை மூவினைமையின்' என்றோதியது.

### இரண்டாம் சூத்திரம்

அவையே தானேயாய்,
இருவினையிற்
போக்கு வரவுபுரிய, ஆணையின
நீக்கமின்றி நிறகுமன்றே.

பெத்த உயிர்கள்
இறத்தல் பிறத்தல்களைப் புரியும்

முதல்வன் பெத்த உயிர்களின் பொருட்டு முத்தொழில் செய்வானென்றோம் முத்தொழில் எனபது முதற் காரணமாகிய மாயையினின்று உலகினைத் தோற்றி நிறுத்தி ஒடுக்குதலென்றும் சொனனோம். உலகின் தொழிற்பாடாவது அதிலுள்ள எல்லாச் சடப்பொருள்களின் தொழிற்பாடாம். இச்சடப் பொருள்கள் யாவும் உடல், கருவி, உலகு, இன்பமெனனும் நானகு பிரிவில் அடங்கும். இவற்றுள் உடல் என்பது ஓர் உயிரைப் பொருந்தியுள்ள எவ்விதத் தேகமுமாம். இத்தேகமும என்றும் நிலைத்திருப்பதில்லை. ஏனை ஒவ்வொரு பொருளும் ஒடுங்குவது போல இத்தேகமும் ஒடுங்கும். யாதாயினும் ஒரு பொருள் ஒடுங்கும்போது அது சூக்கும வடிவாய்மாறி அதற்குக் காரணமான சூக்குமப் பொருளிலேயே ஒடுங்குமென்றோம். காரியப் பொருள் ஒடுங்கும்போதெல்லாம் அதன் காரணமான சூக்குமப் பொருளும் உடன் ஒடுங்குவதில்லை யென்றும், மீளவும் ஒரு காரியத்தைத் தோற்றுவிக்குமென்றும் சொன்னோம். அப்படியே இத்தூலதேகம் ஒடுங்கும்போது இதற்குக் காரணமான தன்னுடலும் உடன் ஒடுங்குவதில்லை. இச் சூக்கும தேகத்தினின்றேயே அததூலதேகப் பொருள்கள் யாவும் சூக்குமமாய் மாறி யொடுங்கும். மீள இதனினின்றே வேறொரு தூலதேகம் உண்டாதற்கும் இடனும் நிற்கும். இதுவேயுமன்றி வேறுவித தேகங்களைத் தோற்றுவித்தற்கும் இடனும் நிற்கும். ஆகவே இத்தூல தேகத்தோடு கூடியிருந்த உயிர் அத்தூல தேகம் கெட்டொழிந்தபோது தனக்கு யாதொரு தேகமுமின்றி நிற்குமெனபதன்று. அத் தூல தேகம கெட்டபோதும், கெடாது நிற்கும் சூக்கும தேகத்தைப் பொருந்தி நிற்கும. மீள அச்சூக்கும தேகத்தினின்றும் வேறு தூலதேகம் உண்டாகும்போது அதனோடு கூடியும் வரும். எனவே உயிர், ஒரு தேகத்தைவிட்டு மற்றொரு தேகத்தைப் பற்றுதலன்றி வேறில்லை. அது கூடியிருந்த தூலதேகம் ஒடுங்க, உயிர் அதனைவிட்டு நீங்குதலே அதன் இறத்தல் எனப்படும். அவ்வாறு நீங்குதல் அத்தூலதேகப் பொருள்கள யாவும் சூக்குமப் பொருள்களாய் மாறியபின்தான் என்பதன்று. அப்பொருள்கள் காலாந்தரத்தில் மாறுவன; சிறிது சிறிதாய் மாறுவன. அவை மாறி ஒடுங்கத் தொடங்கிய அக்கணமுதலே, அவற்றுலாகிய தூலஉடம்பில் உயிர் தங்கி நிற்குமாறில்லை. தாமே மாறிக்கொண் டிருக்கும் பொருள்கள் உயிர் தங்குதற்கு இடனாய் அமைந்து நிற்பது எப்படி? அவ்வாறு அமைந்து நிற்கும் வன்மையை இழந்து விடுமன்றோ? ஆதலால் உயிர் அத்தூல தேகத்தினின்றும் நீங்கி அதற்குக் காரணமான சூக்கும தேகத்தில மாத்திரம் தங்குவதாகும். ஆனால் இச் சூக்கும தேகத்தினின்று வேறொரு தூலதேக முண்டாகலாமென்று மேலே சொன்னோம். இவ்வாறுண்டாகும் பரு உடலில் உயிர் மீள வருதலே அதன் பிறத்தலெனப்படும். இவையன்றி உயிரே இறக்கும் பிறக்குமெனபதன்று. உயிர்கள் என்றுமுளளன. அவைகள் சுட்டுப்பொருள்களல்ல. அவைகளுக்குத் தோற்றக் கேடுகளிடையா. பிறப்பு இறப்பு இல்லை. அவைகட்குள்ள இறப்புப் பிறப்புகள் அவை தனித்தனி கூடியுள்ள பருவுடல் ஒடுங்க அதனைவிட்டு நீங்குதலும், மீள வேறொரு தூலதேகமுண்டாக அதனோடு வருதலுமே. இவ்விறத்தல் பிறத்தல்களையே இச்சூத்திரம் 'போக்குவரவு புரிய' என்றுணர்த்தியது. ஈண்டு உயிர்கள் என்பது தோன்றும் எழுவாய்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ், கரஞு ஆவணிமீ ௨௰௨ வெள்ளிக்கிழமை

## இது பொதுநன்மையாகுமா?

கொழும்பைச் சேர்ந்த தெகிவலையிலுள்ள மிருகம் பறவை முதலியவற்றின் காட்சிச் சாலையை விருத்தி செய்ய வேண்டியிருப்பதனால், அதற்கு அயலில் வசிக்கும் நூற்றுக்கு மேற்பட்ட மக்களைக்கொண்ட பதினைந்து குடும்பங்கள் ஆறுமாசகால வெல்லையுட் குடியெழும்பிவிட வேண்டு மென்று விவசாயப் பகுதி மந்திரி கட்டளை பிறப்பித்திருக்கிறாராம்; இதனால் அந்த அயலிற் குடியிருக்கும் மக்கள் திகிலடைந்தவர்களாய், வகையறியாது இடர்ப்படுகின்றனர்; அரசினர் இக் காரணம்பற்றித் தங்களைக் குடியெழுப்புவது முறையல்லவென அங்குள்ளோர் பலர் அதிகாரிகளைக் குறை கூறுகின்றனர்; பலர் இலங்கைப் பிரதமருக்கு முறையிட்டுள்ளனர். அப்பகுதியில் வசிப்பவர்கள் தங்களைக் குடியெழுப்புவது முறையல்லவென்று முறையிட்டபோது, மிருகம் பறவை முதலியவற்றின் காட்சிச்சாலை பொது நன்மையைத்தேசித்துச்செய்யுங் கருமமென்று விவசாய மந்திரி விடையிறுத்தாராம்.

இவர்கள் குடியிருக்கும் வீடு வளவுகளை அரசினருக்கு விற்றுவிட்டு ஆறு மாச எல்லையில் வேறெங்கேனும் போய்க் குடியேற வேண்டுமென அதிகாரிகள் அதிகாரத்துடன் கட்டளையிட்டமைக்குக் காரணம், தெகிவலை மிருகம் முதலியனவற்றின் காட்சிச் சாலையில் மிருகங்கள் முதலியன புதியனவாய் வந்து வந்து சேர, அம் மிருகங்களும் இடம் பெறும்படி இன்னும் பல சாலைகள் அமைக்க வேண்டியிருத்தலேயாகும்; மிருகசாலையில் அரசினர் வைத்த அபிமானத்தையும் அவர்கள் அதனை விருத்திசெய்ய வேண்டுமெனக் கொண்டுள்ள ஊக்கத்தையும் நாம் குறைசொல்ல வரவில்லை; ஆனாற் பரம்பரையாக அந்த இடத்தில் வீடுகட்டி வாழ்ந்த மக்களைக் குடியெழுப்பிவிட்டு, சிங்கம் புலி கரடி கழுகு பாம்பு முதலிய மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் ஊர்வனவுக்கும் வீடமைத்துக் கொடுப்பது அரசினருக்கு முறையாகுமா? என்பதுதான் நாம் நிகழ்த்தும் ஆசங்கை; கொழும்புப் பகுதியிற் சில காலமாகக் குடியிருக்க வீடுகள் போதாமையினால், அரசினர் தாமாகவே வீடுகட்டிக் குடியிருக்கக் கொடுத்தலாகிய திட்டத்தைத் தொடங்கி நடத்தி வருகிறார்கள்; அத்திட்டம் மந்தகதியாகவே நடைபெற்று வருகிறது; கொழும்புநகரில் இன்னமும் பல ஆயிரக் கணக்கான இல்லங்கள் அமைக்கப்பட வேண்டுமாம்; விஷயமிப்படியிருக்க, சந்ததி சந்ததியாகக் குடியிருக்கும் மக்கள் நூறு பேரை அந்த அரசினரே, "உங்கள் வீடு வளவுகளை எங்களுக்கு விலைக்குத் தந்துவிட்டு ஆறு மாசத்துட் குடியெழும்பிப்போங்கள்" என்று கட்டளையிடத் தலைப்பட்டால், இச் செயல் வேலிபயிரை மேயத்தலைப்பட்ட வாறுயல்லவா முடியும்! குடியிருக்க இல்லமில்லாத இந்தச் சமயத்திலே, இருப்பவர்களையும் குடியெழும்பிப்போங்களென்று அதிகாரிகளே கட்டளைபண்ணத் தலைப்பட்டால், இந்தஏழைமக்கள்யாரிடம்போய் முறையிடுவது? யாரைநோவது? இப்படிச் செய்வதிலும் பார்க்க விவசாயப்பகுதி யதிகாரிகள், மேலே சொல்லப்பட்ட மிருகங்கள் பறவைகள் நச்சுப் பாம்புகள் சஞ்சரிக்கும் காடுகளுக்கு இவர்களைப்போய்க் குடியேறும்படி கட்டளை பிறப்பிக்கலாமே! அப்படிச் செய்தால் "கொடுங்கோன் மன்னர் வாழுநாட்டிற் கடும்புலிவாழுங் காடு நன்றே" என்றபழமொழியும்ஒரு அளவிற்கு ஏற்புடைத்தாகும். எந்த அதிகாரியாக, எந்தமந்திரியாக, தங்களாற் பரிபாலிக்கப்படும் மக்களானவர்கள், சிங்கம் கரடி புலி பறவை பாம்பு முதலியவற்றைக் காட்டிலும் பன்மடங்கு விசேடமான பிறப்புக்களென்பதையுணர்ந்து கொள்ள வேண்டும். காட்டுமிருகங்கள் பறவைகள் பாம்புகளைக் கொண்டுவந்து காட்டில்விட்டு, அவைகள் சஞ்சரிக்க இடங்கோலுவது பொது நன்மைக்காகிய கருமமாம்; ஆனால் தலைமுறை தலைமுறையாக நாட்டிலே வாழ்ந்தமக்களை அங்குத்தானே குடியிருக்கச் செய்வது பொது நன்மையான கருமத்தின் பாற்படாதாம்; இது என்னவிந்தை? பிரதமர் சனநாயகவின் கீழும் பல யானைகள் சிங்கங்கள் கரடி புலிகள் நச்சுப் பாம்புகளுண்டு; அவைகளுடைய நோக்கங்களுக்கு இடங்கொடாமல், இந்தக் குடியெழுப்புத் திட்டம் நிறைவேறாமல், தம்பரிபாலனத்திலுள்ள மக்களைக் குடியிருத்துவது அவர்மேற் பொறுத்த கடனாகும். "வேந்தன் சீறின் ஆந்துணையில்லை" என்பது முதுமொழியாகும்.

### 105 வயசு மூதாட்டி

பாதுக்கையில் வசித்த டோனா லேயசியா என்னும் பெண் சென்ற வாரம் தனது 105-ம் வயசில் மரணமானளாம்.

### சைவ மக்களுக்கு ஆவசியகமான அரசாங்க விடுமுறை நாட்கள்

#### சைவப் பெரியாரொருவர் பின்வருமாறு தெரிவிக்கின்றார்

ஆடி மீ உகூஉ வெளிவந்த இந்துசாதனப் பிரதியொன்று இன்று எனக்குக் கிடைத்தது. அதிலே அரசாங்க சைவ விடுதலை நாட்களைப்பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. ஆடி அமாவாசை சைவசமயத்துக்கு விசேஷமாக உரிய நாளன்று. அமாவாசை பிதிர் வழிபாட்டுக்குரியதன்றிச் சிவவழிபாட்டுக்குரியதன்று. அன்றியும் ஆடி அமாவாசை தை அமாவாசையிலும் சிறந்ததன்று. தீபாவலி சைவசமயத்துக்கு முழுப் பகையான தினமாய் நடைபெறுகின்றது. கொலையும் குடியும் தீபாவலியிலே நடைபெறுகிற அளவு வேறெந்த தினத்திலும் நடைபெறுவதன்று. சைவம் முதலாவதாகக் கண்டிப்பது இவைகள் இரண்டையுமே. சைவசமயம் உத்தமதினமாகக் கொள்வது மஹா சிவராத்திரியேயாம். (இந்தியாவிலே இது அரசினர் விடுதலைகளுள் ஒன்று). எமமூர்ச் சைவர்கள் அதை அநுட்டித்தல் குறைவெனில், அநுட்டியாமை எமது குற்றமன்றிச் சிவராத்திரியின் குற்றமன்று. இரண்டாவதாக எமக்குச் சிறந்த தினம் மார்கழித் திருவாதிரையாம். இலங்கைச் சைவர்கள் அதிகமாக விரும்புவது கந்த ஷஷ்டியாம். இந்த மூன்று நாட்களும் எங்களுக்கு விடுதலை நாட்களாதல் வேண்டும். சித்திரை வருடப் பிறப்பு சிங்களவருக்கும் வருடப் பிறப்பேயாம். தைப்பொங்கலும் சைவத்துக்கு விசேஷமான தினமன்று. அன்று சூரியனுக்கும் இந்திரனுக்கும் வழிபாடு நடைபெறுவது. இவர்கள் மிகச் சிறு தெய்வங்கள்.

### மழையின்மையால் ஊர்காவற்றுறை மக்கள் படும்பாடு

பல மாசங்களாக மழை பெய்யாமையினால் ஊர்காவற்றுறையில் வசிக்கும் மக்கள் படும்பாடு அதிகமாகும்; சென்ற 70 வருடகாலத்தில் இப்படியான மழையின்மையும் கஷ்டமும் நேர்ந்திலவாம். இந்த ஊர்காவற்றுறைப்பகுதியில் ஆறுபிரங்கும் பஞ்சவரையுள்ளனவெனச் சொல்லப்படுகிறது; உலர்ந்திடப்படுதனால் தானியமும் வயலைப் பண்படுத்தப்படவில்லை; பல்லாயிரக்கணக்கான மாடாடுகள் குடிக்கத் தண்ணீரின்மையின்றி அழிகின்றன; இவைகளை யெல்லாங்கண்ட மேற்படி பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. அல்பிரட் தம்பியையா, விரைவிற் கொழும்பு சென்று பிரதமர் சனநாயகவைச் சந்தித்துத் தமதுபகுதிக்கு நேர்ந்த இன்னல்களை யெல்லாம் எடுத்துரைத்தனர்; பிரதமரும் பரிவுகூர்ந்து மேற்படி பகுதிக்கு நேர்ந்த பெரும்பஞ்சத்தையும் ஆபத்தையும் தீர்த்தற்காகிய நிதியுதவ அநுமதித்துள்ளனர்; இப்பொழுது பஞ்சநீக்கத்திற்காகிய முயற்சிகளைசெய்யப்படுகின்றனவாம்.

### நன்றிபாராட்டுகின்றேம்

"சென்றதிங்கட்கிழமை (3-9-51) இறைவெய்திய எங்கள் சிவசுப்போதி, எங்களை நேரில் வர்தும், தந்தி, கடிதங்கள் மூலமாக வாழ்த்தியும் ஆதரித்த எங்கள்சுற்றமித்திரர்களெல்லார்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேம்"

245. நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.
க. மகேந்திரன்
ம. இரத்தினேசுவரி
(தம்பதிகள்)

## நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

### உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (9-9-51—15-9-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

சஞ்சலமானவாரம்; செலவு அதிகம். தேகசுகத்தை விசேஷமாக வயிற்றில் வரக்கூடிய நோயைக் காக்கவேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

கிழமையின் முதன் மூன்று நாளும் கவனமாக நடமாடுக. எஞ்சிய நாட்கள் புதியகருமங்கட்கு அநுகூலமானவை அந்நியருதவியும், சத்துரு நாசமுமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

வாரத்தின் முற்பகுதி புதிய கருமங்களுக்கு அநுகூலமானது, எடுத்த கருமத்தை ஊக்கத்துடன் செய்துக. செவ்வாய்க்கிழமை மத்தியானம் தொடக்கம் வியாழக்கிழமைவரை அவதானமாக நடந்து கொள்க.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

பொதுவாக நன்மையானவாரம். வியாழக்கிழமைக்கு முந்திப் பிரதான கருமங்களில் ஈடுபடுக. வியாழன் மத்தியானம் தொடக்கம்சனிக்கிழமை முடியஅவதானமாக நடந்துகொள்க,

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

இவ்வாரத்தில் முயற்சிகள் தடைப்படக்கூடும். செய்யும்முயற்சியிலும் பயனில்லை. சனிக்கிழமை சாவதானமாக நடந்துகொள்ளவும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

குடும்ப ஒற்றுமையும் சத்துருக்களை ஜெயித்தலுமுண்டு சுற்றமித்திரகளால் அதிக செலவு நேரக்கூடும். பொதுசன மதிப்பும் புகழுமுண்டாம்.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

அற்ப சுகவீனம் நேரக்கூடும்; பொருளிழவும் அவப்பேருமுண்டாம்; எழுத்தில் எவ்வகையான பொறுப்பும் கொடுக்க வொண்ணாது; வாரமுடிவில் அந்நியராற் சகாயமுண்டு.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பார்க்கும் கருமத்தில் அநுகூலமும் புகழுமுண்டு; எதிரிகளை வெல்லலாம்; கடன்தீரும். விவாகம் செய்யாவிட்டால் விவாகப்பேச்சு நிகழக்கூடும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

இனசனத்தவரால் பணச்செலவுண்டாம்; ஆதாயமில்லை; செய்யும் கருமத்தில் ஆர்வம் பிறக்கும்; பொதுக் கருமங்களில் ஈடுபட்டுழைக்கவரும்.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

சமயத்திலே மித்திரர்களும் காட்டிக்கொடுப்பார்கள்; நண்பர்களை அதிகம் நம்பவேண்டாம்; தவறான முறையில் யாருக்கும் உதவி செய்யப் போனால் ஆபத்து நேரவுங்கூடும்; எவரோடும் எதிர்த்து நியாயம்பேச ஒண்ணாது.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2 ம் 3-ம் பாதம்

உத்தியோகம் முதலிய முயற்சிகள் அநுகூலமாயிருக்கும். ஆனால் வீட்டில் அற்ப குழப்பம் நேரக்கூடும். மனைவிமக்களால் வைத்தியச்செலவுண்டாகும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

காணிபூமியால் வரவுண்டு. சத்துருநாசம் கீர்த்தியுண்டாம். ஆனால் புருஷன் மனைவிகளுக்கிடையே வாரமுடிவிலே பிணக்குண்டாகும்.

## சுயபாஷைக்கு முதலிடமளிக்க வழி

அகில இலங்கைச் சுயபாஷா இயக்கத்தின் 4-வது வருடாந்தக் கூட்டம் வண்ணை நாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் திரு. க. முருகேசு ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரையில் இலங்கையின் பல பாகங்களிலும் சுயபாஷைகள் படும் அவஸ்தைகளையும் இவ்வியக்கத்தின் அவசியத்தையும் எடுத்துக் கூறினர். காரியதரிசியின் அறிக்கை படிக்கப்பட்ட தும் பல அறிஞர்கள் சுயபாஷையின் முன்னேற்றம் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். ஈற்றில் உத்தியோகத்தர் தெரிவின்போது திருவாளர்கள் சி. கந்தமூர்த்தி காரியதரிசியாகவும், வை. இராமகிருஷ்ணன் உபகாரியதரிசியாகவும், க. முருகேசு தலைவராகவும், இ. சின்னத்துரை உபதலைவராகவும், கா. செல்வநாயகம் தனாதிகாரியாகவும், சி. நடராசா உபதனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் பதினேழு நிர்வாகசபை அங்கத்தவரும் தெரிவு செய்யப்பட்டனர். —கடித

---

## விவாகம்

### கந்தப்பா — சரோஜா

வண்-வைத்தீஸ்வரசுவாமி ஆதீனம், திரு. கவு. கந்தப்பாவுக்கும், ஓத்தூர். திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை புதல்வி திருவளர் செல்வி சரோஜாவுக்கும், சென்றதிங்கட்கிழமை காலை (3-9-51) மேற்படி தேவஸ்தானத்திலுள்ள மணமகனில்லத்திலே விவாகம் சிறப்பாக நடைபெற்றது.

O

### பேரம்பலம் — விஜயலட்சுமி

நிகழும் ஆவணி மீ கஅ உ (3-9-51) திங்கட்கிழமை பகல் 11 மணியளவில், மயிலிட்டி திரு. வேலுப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரன் டக்டர் பேரம்பலத்துக்கும், வட்டுக்கோட்டை திரு. அ. தில்லையம்பலம் புத்திரி திருவளர் செல்வி விஜயலட்சுமிக்கும் மணமகளில்லத்தில் விவாகம் சிறப்புற நிறைவேறியது.

தம்பதிகள் சகல செல்வங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் இறைவனருள் முன்னிற்க.

---

## நவாலி கிராம முன்னேற்றச் சங்கம்

இச்சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் 3-9-51 பிற்பகல் 6 மணியளவில் மானிப்பாய்க் கிராமச் சங்கத் தலைவர் திரு. வை. மகேசன் தலைமையில் நவாலி மணிமண்டபத்திற் கூடியது. இணைக்காரியதரிசி திரு. K. குழந்தைவேலு அறிக்கையும், தனாதிகாரி திரு. A. சிவசுப்பிரமணியம் வரவு செலவுக் கணக்கும் வாசித்தனர். பின் முதலியார் C. முத்துத்தம்பி கிராம முன்னேற்றச் சங்கம் செய்யவேண்டிய கடமை என்னும் விஷயம் பற்றிப் பேசியபின் அதனை ஆதரித்துச் சிறந்த அறிஞர்கள் குறிப்புரைகள் கூறினர். திருவாளர்கள் V. மகேசன் தலைவராகவும், K. சொர்ணலிங்கம் உபதலைவராகவும், S. ஆறுமுகம், K. குழந்தைவேலு என்பவர்கள் இணைக்காரியதரிசிகளாகவும், A. சிவசுப்பிரமணியம் தனாதிகாரியாகவும், S. சுவாமிநாதன் உப தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஈற்றில் இணைக்காரியதரிசி திரு. S. ஆறுமுகம் நன்றியுரை கூறினர். —கடித.

---

## சிவஞானபோதச் சொற்பொழிவு

1-ம் பக்கத் தொடர்ச்சி

### பெத்த உயிர்கள் மாறிமாறி இறத்தல் பிறத்தல் புரியும்

உயிரோடு கூடியிருந்த பரு உடல் மாறியொடுங்க, உயிர் அதனைவிட்டு நீங்கலே அதன் இறத்தல் என்றோம். இவ்வாறு இறந்த உயிர் மீளவும் பிறக்குமா? அன்றி இறந்து ஒழிந்தே போகுமா? என்பதையும் ஆராயவேண்டும். ஒடுங்கிய ஒவ்வொரு பொருளும் ஒடுங்கியவாறே கிடவாது மீளவுந் தோன்றுமென்றோம். இவ்வுலகனைத்தும் ஒடுங்கிய பின்னரும் மீளத் தோன்றுமென்றோம். இவ்விருதிறத் தோற்ற ஒடுக்கங்களின் பயன் ஆணவமல நீக்கமென்றுஞ் சொன்னோம். ஆதாவது சகல உயிர்களும் ஆணவத் தடையினின்றும் நீங்கும் வரை மேற்கூறிய இருதிறத்துத் தோற்ற ஒடுக்கங்களும் மாறி மாறி நிகழும். அதுபோல எந்த உயிரும் தன்னறிவைத் தடைசெய்துள்ள ஆணவத்தினின்றும் நீங்கும் வரை மாறிமாறி இறத்தல் பிறத்தல்களைப் பொருந்தும். ஆகவே ஓர் உயிர் இறந்ததும் இறந்தொழிந்தே போமென்பதன்று. அதன் அறிவைத் தடுத்துள்ள ஆணவம் நீங்கும்வரை பிறந்திறந்து கொண்டே வரும். இவ்வுண்மையை விளக்கவே இச்சூத்திரம் வரவு போக்கு புரிய என்றது, இறந்த உயிர் மீளவும் பிறக்குமென்பதை உணர்த்தப் 'போக்கு' என்பதை முன் வைத்துப் 'போக்குவரவு புரிய' என்றொழியது.

### பெத்த உயிர்கள் தத்தம் இருவினைக்கேற்ப இறத்தல் பிறத்தல்களைப் புரியும்

ஓர் உயிர் இறந்ததும் அது கூடியுள்ள தூலதேகம் சூக்குமப் பொருள்களாய் மாறி அதற்குக் காரணமாயுள்ள சூக்கும தேகத்தில் ஒடுங்குமென்றோம். அச்சூக்கும தேகத்தினின்று மீளவும் ஒரு தூல தேகம் தோன்றுமென்றும் சொன்னோம். மீளத் தோன்றும் தூல தேகம் முன்னிருந்த தேகமன்று. சூக்குமதேகம் ஒன்றேயாயிருந்தாலும், அதினின்று தோன்றுந் தூல தேகம் பிறிதோரும் வெவ்வேறே. அன்றியும் ஓருயிர் பொருந்தியுள்ள தேகமும் மற்றோருயிர் பொருந்தியுள்ள தேகமும் வெவ்வேறாகவே காணப்படும். ஓர் உயிர் மனித தேகத்தையும், மற்றோருயிர் மிருக முதலிய தேகத்தையும், ஓர் உயிர் உறுதியான தேகத்தையும், மற்றோர் உயிர் உறுதியற்றதேகத்தையும், ஓர் உயிர் சுகதேகத்தையும் மற்றோருயிர் துக்கதேகத்தையும் இவ்வாறு பலவிதமாய்ப் பேதப்பட்ட சரீரங்கள் உயிர்கட்கிருக்கவும் காண்கின்றோம். இதுவுமன்றி ஒரு தேகம் பல ஆண்டுகள் அழியாதிருக்கவும் மற்றொன்று சில நாட்களிலும் சில கணங்களிலும் அழியவும் காண்கின்றோம். இத்தேகங்களை இவ்வாறு பேதப்படத் தோற்றுவிப்பவன் ஏனையுலகப் பொருள்களைத் தோற்றுவிக்கும் முதல்வனே, இம் முதல்வன் இத்தேகங்களை யாதும் நியதியின்றி இவ்வாறு பேதப்படத் தோற்றுவிப்பானோ? அன்றி யாதாயினும் நியதிப்படி தோற்றுவிப்பானோ? அந்நியதிதான் யாது? என்பதை ஆராய்வாம்

---

## "மாதர்க்கு அழகைத் தருவன மார்பும் கூந்தலுமே"

"ஐயா, மாதர்களாயுள்ளார்க்குப் பேரழகைத் தருவன அவர்களுடைய மார்பும் அடர்ந்து நீண்ட கூந்தலுமேயாகுமென்றுங் கருத்துப்பட எங்கள் நாட்டுப் புலவர்கள் பலர் பாராட்டிப்பாடியுள்ளார்கள்; அப்படியிருக்க இந்த மனுஷன் தன் மனைவியின் நீண்டகூந்தலைக் கத்தரித்து இவளுடைய பேரழகைக் கெடுத்துவிட்டான்" என்னுங் கருத்துப்பட பாணந்துறை நீதிதலத்திலே ஸினிவிக கோறு என்னும் இளம்பெண் தனது கணவனுக்கு மாறாகத் தொடர்ந்த வழக்கில் வழக்காளிக்கு நியாயவாதியாக ஏற்பட்ட திரு. K. C. L பெரேரு வாதித்தார். கத்தரிக்கப்பட்ட நீண்ட கொண்டையும் நீதிதலத்திற் கொண்டுவந்து காட்டப்பட்டதாம்; இதில் வழக்காளியின் வாய்ப்பிறப்பு:- "எனக்கு வயசு 29 என் கணவர் எப்போதும் என்னை இம்சித்து வந்தார்; அவர் தமமுடையஉடைமை எப்பொழுதும் எனக்கொண்டே தோய்ப்பித்து வந்தார்; இப்பொழுது நான் எட்டு மாசக் கருப்பிணி: அதனால் அவருடைய அணிலை நான் தோய்த்து உலரப்போட மறந்தேன்; அதனால் கோபங்கொண்டு இவர் என்னை வைது என் கூந்தலைக் கத்தரித்துவிட்டார்" நீதிபதி எதிரியைப்பார்த்து "நீ உன் மனைவியின் கூந்தலைக் கத்தரித்து இவளின் அழகுக்குப் பங்கஞ் செய்துவிட்டாய்; இது பெருந்தவறு; நீயே இவளை ஏற்று இனிமேல் இவளுக்கு எவ்வகையான இன்னலுஞ் செய்யாமல் அன்பாக நடக்கவேண்டும்" என்று எச்சரிக்க, கணவன் அதற்கு உடன்பட, அவனிடத்தில் நன்னடத்தைப்பிணைப்பத்திரத்தில் கையெழுத்துப்பெற்றுக் கொண்டு, அவனை அவளுடன் சேர்த்துவிட்டாராம்.

---

## அரசினர் கண்ணாடித் தொழிற்சாலை

நாத்தாண்டியாவிலுள்ள அரசினர் கண்ணாடித் தொழிற்சாலையில் ஏதோ பிரதான யந்திரம் சென்ற நூலாய் மாசம் பழுதுற்றமையினால், அங்கு வேலை செய்தவர்கள் 325 பேருக்கு அத்தொழிற்சாலையில் வேறு வேலைகள் கொடுக்கப்பட்டன; அவ்வேலைகளையும் அவர்கள் ஒருவாறு செய்து முடித்துவிட்டனராம்; யந்திரஞ் சரிவருதற்கு இன்னும் ஒருமாசகாலஞ் செல்லுமெனவும் இதனால் 200 வேலைகாறர் வேலையின்றிக் கஷ்டப்படுகின்றனரெனவும் அறிகிறது.

---

இலங்கையின் மிகப் பெரிய

— நகை —

வியாபாரிகள்

= O =

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

L. K. S LEBBAY BROS
GOLD HOUSE



தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

---

# ரேடியோ

## * இசைத்தட்டு

**திருச்சி சனி செப்ரெம்பர் 8**

காலை 7 10 ஆரம்பம் * 7 15 தமிழில் செய்தி 7 30 கும்பகோணம் வி. ராஜேஸ்வரி பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள்கேட்டவை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 ஆங்கிலப்பேச்சு 2 தமிழில் செய்தி 2 10 ஆங்கிலப்பேச்சு 2 30 சித்ரகானம் * 2 45 முடிவு.

மாலை 5 30 ஆவுடையார்கோவில் என் ஹரிஹர பாகவதர் ஜலதரங்கம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 ரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* ஜி என் பாலசுப்ரமண்யம் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 கவிச்சொல்வேளை 9 30 ஸோஹன் லிக் ஒலிப்பதிவு 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு செப்ரெம்பர் 9**

7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

12 சித்ரகானம் * 12 30 சூர்யகாந்த தம்பதிகழ்ச்சி 1 மலர் 1 30 வாத்ய இசை * 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 குரல்வகை * 2 தமிழில்செய்தி 2 10 பெண்ணுலகம் 2 30 சென்ட இசைநிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 கோவிந்தஐயங்கார் வீணை 5 45 ஜானகி ஸ்ரீநிவாசன் பாட்டு 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள்கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம் * 7 45 முக்கால நண்பர்கள் பேச்சு 8 மால் அழகர் குறவஞ்சி இசைநாடகம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கோவிந்த ஐயங்கார் வீணை 10 முடிவு.

**திருச்சி திங்கள் செப் 10**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 பழமாநேரி என் நடராஜன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு

12 30 சித்ராப் பள்ளிகளுக்கு 1 நீங்கள்கேட்டவை* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 வயலின்* 2 தமிழில்செய்தி 2 10 ஜெமினி வாத்யகோஷ்டி 2 15 ஆங்கிலப் பேச்சு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 எம் பத்மநாபன் வயலின் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சிவாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 சமஸ்கிருதம்கூறுவது 8 எம பத்மநாபன் வயலின் 8 30 பழனி விஜயலக்ஷ்மி * 8 45 ஆங்கிலப் பேச்சு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 பழமாநேரி எஸ் நடராஜன் பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வாய் செப் 11**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 மாங்குடி வி நடராஜன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 பஜனை * 8 30 முடிவு.

12 30 உயர்தரப்பள்ளிகளுக்கு 1 பாரதி பாடல்கள் * 1 25 என கணவர் பாரதியார்பேச்சு 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 நாட்டிய சங்கீதம் * 2 தமிழில் செய்தி 2 10 உஸ்தாத் பர்துகான் ஸாரங்கி* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 வீணை இல்ருபா ஆ இ சே வித்வான்கள் 5 45 இசைபபயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 மாங்குடி வி நடராஜன் பாட்டு 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சுடர் இசைநாடகம் 8 திருவிழிமிழலை சுப்ரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 பாரதிவிழாக்கொண்டாட்டம் எட்டயபுரம் அஞ்சல் 10 முடிவு.

---

## 65 வயசு முதியவனுக்கு மரண தண்டனை

K. D. ஜோன்பெறிரு என்னும் 65 வயசுவயதுடைய ஒரு கிழவன் 39 வயசுவரைகொண்ட குமாரிஹாமி யென்னும் பெண்ணைக் கொலை செய்தானென்ற குற்றச்சாட்டின் பேரால் கண்டி உயர்தர நீதிமன்ற விசாரணைப்போது விளங்கி மரண தண்டனை விதிக்கப்பட்டான்.

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எசசந்த சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாளுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

க டன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std 14 20-11-46—20-11-49



# சாலாமிஸ்ரி லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சக்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25.00. அரைறுத்தல் விலை ரூபாய் 12-50
கால்றுத்தல் விலைரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

எமது சோல் ஏசன்றுகள்

| 1 மோகன் அன் கொம்பனி<br>No. 66 முதலாம் குறுக்குத்தெரு<br>கொழும்பு | 2 நவலெட்சுமி புத்தகசாலை<br>செட்டியார் தெரு<br>கொழும்பு |
|---|---|

K. ஆறுமுகம்பிள்ளை
எமது விலாசம் நி 3/1 தட்டாதெரு
கோட்டைமுனை, மட்டக்களப்பு

M 92



வந்திருக்கின்றன! .வந்திருக்கின்றன!!

# திறமான தேக்கமரங்கள்

பல திணிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி றோட்
யாழ்ப்பாணம்

Std 2


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
1. காம்பன் நூயதம்பி தம்பித்துரையும் பெண் 2. ஷை சிவஞானம்பா
இல. 5787. வழக்காளி.
1. காம்பன் இளயதம்பிசாகராசாவும் பெண் 2. ஷை அமிர்தாம்பாள்
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 5787ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1951 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமைமுற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிறசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா: 1300-00 இதில் ரூபா 750/= க்கு 12-8-49 தொடக்கம் 27-9-49 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு பத்துவீதமான வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் 27-9-49 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீதமான வட்டியும் செலவு ரூபா 199-93 இதில் ரூபா 300-00 கொடுபட்டது.

காணிவிபரம்

தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக்கோயிற்பற்று காம்பன் இறை சென்னுமுத்தம் கெற்பரப்பு 10 ம் வீட்டில் அரைவாசி கிழக்குப்பக்கமும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு மரியாம்பிள்ளை பெண் மேரிப்பிள்ளை வடக்கு சவிரிமுத்து பிலிப்புப்பிள்ளை மேற்கு சதாசிவம் பெண் சிவயோகம்மா தெற்கு பொன்னர் கைம்பெண் சிவக்கொழுந்து இதில் வடக்கருகாக மேற்குப்பக்கத்திலிருக்கும் சிவயோகம்மாவினுதனத்துக்கு போக்குவரவுசெய்யும் 4 முழ அகல ஒழுங்கையும் இதற்குள்ளிருக்கும் கிணற்றில் அக்காணிக்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் பிறசீங்கலாக இதடங்கலும்.

காரைநகர் 22-8-51.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
கொம்மிஷனர்.

M. 94 7—9—51.

## பனை தறிக்கத் தடை

கல்லோயாத்திட்ட வேலைக்கு இருபத்தையாயிரம் பனை தேவையென்ற விளம்பரம் யாழ்ப்பாண நாட்டிற் பெரும் கிளர்ச்சியை யுண்டாக்கிவிட்டது; பல இடங்களில் இத்தடை விஷயமான கூட்டங்கள் ஆங்காங்குள்ள மக்களாற் கூட்டிப் பனை தறித்தற்கு மாறுன பிரசாரணம நடைபெறுகின்றது. சென்ற வாரம் ஏழாலையில் மந்திரி திரு G G.பொன்னம்பலத்தின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றபோது, இங்குள்ள மக்களுக்குச் சீவாதாரமாகவுள்ள பனைகளைத் தாம் தறிக்கவிடாது தடுத்தற்குரிய வழிவகைகளை உடனே செய்வதாக வாக்களித்துள்ளார்; உலக இரண்டாம் யுத்தம் சேர்ந்த காலத்தில் பெண்பனைகளை மாத்திரம் தறிக்கவொண்ணுதென்ற கட்டுப்பாடுண்டு; ஆனுல் ஆண்பனைகளினறிப் பெண்பனைகள் விருத்தியடையாதாகையால் அவைகளையுந்தறிக்காது கட்டுப்பாடு செய்யவேண்டுமெனபதே திரு. பொன்னம்பலத்தின் கொள்கை.


## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரக்யாதிபெற்ற சாய்ப்புக்கு சிறுபையன் 12, 15 வயதுக்குள் தேவை.

கீழ்க்கண்ட விலாசத்துக்கு நேரில் விண்ணப்பிக்கவும்.

11 பெரிய தெரு.
யாழ்ப்பாணம்.

M. 95 7—9—51.



# பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம்
உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன்
விலை ரூபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு)
சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரதகாலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது;
விலை சதம் 40

வில்லி பாரதம்-புட்ப யாத்திரைச் சருக்கம்
பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ. 1—25ச.

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்
மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு. நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது.
விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்
மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகாநந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாகவிதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்)
ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.
விலை ரூ. 1—25 ச.

ஈழமண்டல சதகம்:
ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் ... ... ரூ. 1·00

சைவ சமயசாரம்:
ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை சதம் 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்)
சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது.
விலை 60 சதம் (அஞ்சல் 10)

முற்பணம் அனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to
PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai, Jaffna.


Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai; Jaffna, on Friday September 7, 1951